# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 18, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்திய மாலுமிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பிடம் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

(i) பிரான்ஸின் ஏவியான் நகரில் ஜி7 உச்சிமாநாட்டையொட்டி டிரம்ப்புடன் நடத்திய இருதரப்பு பேச்சுவார்த்தையில் பிரதமர் இவ்வாறு கூறினார்.

(ii) இரு தலைவர்களும் நேரில் சந்தித்து, விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும்.

(iii) ஓமன் கடல் பகுதியில் சரக்கு கப்பல் மீது அமெரிக்க ராணுவம் சில தினங்களுக்கு முன் நடத்திய தாக்குதலில் மூன்று இந்திய மாலுமிகள் உயிரிழந்த நிலையில், மாலுமிகள் பாதுகாப்பு விவகாரத்தை டிரம்ப்பிடம் பிரதமர் மோடி எழுப்பினார்.

(iv) அத்துடன், ஈரான்-அமெரிக்கா இடையே வெள்ளிக்கிழமை (ஜூன் 19) கையொப்பமாக உள்ள அமைதி ஒப்பந்தத்தில் மாலுமிகளின் பாதுகாப்புக்கான அம்சமும் இடம்பெற வேண்டுமென பிரதமர் வலியுறுத்தினார்.

2. தூத்துக்குடியில் ரூ.38,000 கோடியில் அமைக்கப்படும் அதிநவீன கப்பல் கட்டுமான திட்டத்தை விரைந்து செயல்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் என்று முதல்வர் ஜோசப் விஜய் தெரிவித்தார்.

3. 'ஆசியான்' கூட்டமைப்பில் உள்ள தென் கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் ரஷியா இடையே வர்த்தகம் மற்றும் இதர உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் 2 நாள்கள் உச்சி மாநாட்டை ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் தொடங்கி வைத்தார்.

(i) ரஷியா, ஆசியான் நாடுகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தை உறவின் 35-ஆவது ஆண்டுகள் நிறைவையொட்டி, ரஷியாவின் கசான் நகரில் இந்த உச்சி மாநாடு நடத்தப்படுகிறது.

(ii) ரஷிய அதிபர் புதினும், ஆசியான் அமைப்பின் தற்போதைய தலைமைப் பதவியை வகிக்கும் பிலிப்பின்ஸ் அதிபர் ஃபெர்டினாண்ட் மார்கோஸ் ஜூனியரும் இணைந்து இந்த உச்சி மாநாட்டுக்கு கூட்டாகத் தலைமை தாங்குகின்றனர்.

(iii) பிலிப்பின்ஸ், புரூணே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், சிங்கப்பூர், தாய்லாந்து, கிழக்கு திமோர், வியத்நாம் ஆகிய ஆசியான் உறுப்பு நாடுகளுடன் ரஷியாவின் உத்திசார் உறவை விரிவுபடுத்துவதற்கான வழிகள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும்.

(iv) மேலும், மாநாட்டுக்கிடையே ஆசியான் நாடுகளின் தலைவர்களுடன் புதின் தனித்தனியாக இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் நடத்தவுள்ளார் என்று ரஷிய அதிபர் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

(v) ஆசியான் அமைப்பில் உள்ள பிலிப்பின்ஸ் போன்ற சில நாடுகள் அமெரிக்காவுடன்

இணக்கமான உறவைக் கொண்டுள்ள போதிலும், சில நாடுகள் சீனா மற்றும் ரஷியாவுடன் வலுவான வர்த்தக மற்றும் பாதுகாப்புத் தொடர்புகளைக் கொண்டுள்ளன.

(vi) ஈரான் போர் காரணமாக உலக அளவில் எரிபொருள் விலை உயர்ந்ததைத் தொடர்ந்து இந்தோனேசியா, தாய்லாந்து, வியத்நாம் உள்ளிட்ட பல ஆசியான் நாடுகள் ரஷியாவிலிருந்து கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்தன அல்லது அதை வாங்குவதில் ஆர்வம் காட்டின என்பது குறிப்பிடத்தக்கது.

4. அமெரிக்க ராணுவத்தின் இந்தோ-பசிபிக் படைப்பிரிவின் பெயரில் இருந்து இந்தோ நீக்கப்பட்டு, மீண்டும் அமெரிக்க பசிபிக் படைப்பிரிவு என பெயர் மாற்றப்பட்டுள்ளது.

(i) இந்திய பெருங்கடல், பசிபிக் பெருங்கடல் ஆகியவற்றை உள்ளடக்கிய பரந்த புவியியல் மற்றும் உத்திசார்ந்த பகுதி இந்தோ-பசிபிக் பிராந்தியம் என்றழைக்கப்படுகிறது. இந்தப் பிராந்தியம் முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவின் இந்தோ-பசிபிக் படைப் பிரிவு பொறுப்பு வகித்து வருகிறது.

(ii) இந்தியப் பெருங்கடல்-பசிபிக் பெருங்கடல் பகுதிகளுக்கு இடையிலான பிணைப்பு அதிகரித்ததைக் கருத்தில் கொண்டு, கடந்த 2018- ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் முதல் பதவிக்காலத்தில், இந்தப் படைப் பிரிவுக்கு இந்தோ-பசிபிக் படைப் பிரிவு என பெயர் சூட்டப்பட்டது. இந்நிலையில், அந்தப் படைப் பிரிவின் பெயரில் இருந்து தற்போது இந்தோ என்ற வார்த்தை நீக்கப்பட்டுள்ளது.

(iii) இதுகுறித்து அமெரிக்க பாதுகாப்புத் துறை வெளியிட்ட அறிக்கையில், கடந்த 1947-இல் அப்போதைய அமெரிக்க அதிபர் ஹாரி எஸ்.ட்ரூமனால் உருவாக்கப்பட்ட இப்படைப்பிரிவு, 2- ஆம் உலகப் போருக்குப் பிந்தைய பிராந்திய பாதுகாப்பை கட்டமைத் ததிலும், கொரியா போர், வியத்நாம் போர் மற்றும் எண்ணற்ற மனிதாபிமான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்ததிலும் பெரும் பங்காற்றியுள்ளது. இத்தகைய படைப்பிரிவின் வரலாற்றுச் சிறப்பைப் போற்றும் வகையில், பல்லாண்டு கால ராணுவப் பாரம்பரியத்தை தாங்கி நிற்கும் பழைய பெயர் அந்தப் பிரிவுக்கு மீண்டும் சூட்டப்பட்டுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) அதேநேரம், தற்போதைய பெயர் மாற்றத்தால், இப்படைப்பிரிவின் செயல்பாட்டு எல்லைகளில் எவ்வித மாற்றமும் இல்லை எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

(v) அமெரிக்காவின் மேற்கு கடற்கரையிலிருந்து இந்தியாவின் மேற்கு எல்லை வரையிலான பரந்த கடல் பரப்பை இப்படை தொடர்ந்து கண்காணிக்கும். மேலும், பிராந்திய நட்பு நாடுகளுடன் இணைந்து சுதந்திரமான மற்றும் தடையற்ற கடல் வழியை உறுதி செய்யும் இதன் செயல்பாடுகள் தொடரும்' எனப் பாதுகாப்புத் துறை விளக்கமளித்துள்ளது.

5. பிரேஸிலின் முன்னணி விமானத் தயாரிப்பு நிறுவனமான எம்ப்ரேயரும் அதானி குழுமமும் இணைந்து, இந்தியாவில் பிராந்திய போக்குவரத்து விமானங்களுக்கான இறுதி ஒருங்கிணைப்பு தொழிற்சாலையை குஜராத்தின் தோலேராவில் அமைக்க முடிவு செய்துள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(i) உள்நாட்டு விமானப் போக்குவரத்தை ஊக்குவிக்கும் மத்திய அரசின் 'உடான்' திட்டம் மற்றும் 'தன்னிறைவு இந்தியா' கொள்கைக்கு வலு சேர்க்கும் வகையில், பிராந்திய போக்குவரத்து விமானங்களை இந்தியாவிலேயே தயாரிப்பதற்காக இரு நிறுவனங்களுக்கும் இடையே கடந்த ஜனவரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

கையொப்பமானது. அதன் தொடர்ச்சியாக, தற்போது இந்த ஆலைக்கான இடம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

(ii) அகமதாபாத் அருகே அதிநவீன பசுமைத் தொழிற்பேட்டையாக மேம்படுத்தப்பட்டு வரும் தோலேரா சிறப்பு முதலீட்டு மண்டலத்தில் இப்புதிய ஆலை அமையவுள்ளது.

(iii) இந்த ஆலையில் படிப்படியாக உள்நாட்டு தொழில்நுட்பப் பயன்பாடு அதிகரிக்கப்பட்டு, இந்தியாவிலேயே விமானங்கள் முழுமையாக உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(iv) தற்போதைய நிலையில் இந்திய விமானப் படை, அரசு முகமைகள் மற்றும் 'ஸ்டார் ஏர்' போன்ற வணிக விமான நிறுவனங்கள் உள்பட சுமார் 50 எம்ப்ரேயர் விமானங்கள் இந்தியாவில் பயன்பாட்டில் உள்ளன.

6. இந்திய வம்சாவளி தொழில் முனைவோர் இணைந்து நிறுவிய பிரபல 'கர்சர்' ஏ.ஐ. தொழில்நுட்ப நிறுவனத்தை சுமார் 6,000 கோடி டாலருக்கு வாங்க ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது.

(i) இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, ஸ்பேஸ்எக்ஸ்-இன் முழு உரிமையுள்ள துணை நிறுவனமான எக்ஸ்67, கர்சர் நிறுவனத்துடன் இணைக்கப்படும். அதன் பிறகு, கர்சரின் பங்கு மதிப்பு 6,000 கோடி டாலராக மதிப்பிடப்பட்டு, அது ஸ்பேஸ்எக்ஸின் முழுமையான துணை நிறுவனமாகச் செயல்படும்.

7. இந்தியா-பிரிட்டன் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், நிகழாண்டு ஜூலை 15-ஆம் தேதி அமலுக்கு வரவுள்ளதாகப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

(i) இதுதொடர்பாக அவர் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'இந்தியா-பிரிட்டன் உறவில் வரலாற்று மைல்கல் ஏற்பட்டுள்ளது. இந்தியா-பிரிட்டன் இடையிலான விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்) நிகழாண்டு ஜூலை 15-ஆம் தேதி அமலுக்கு வரவுள்ளது. இந்த ஒப்பந்தம் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை பெருமளவு அதிகரிக்கும்.

(ii) ஏராளமான விவசாயிகள், தொழிலாளர்கள், சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள், புத்தாக்க நிறுவனங்கள் (ஸ்டார்ட்-அப்), புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபடுவோருக்கு இந்த ஒப்பந்தம் ஏராளமான வாய்ப்புகளை அளிக்கும். அத்துடன் 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற கனவை நனவாக்குவதற்கு அர்த்தமான பங்களிப்பை வழங்கவும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும்.

(iii) இந்த ஒப்பந்தம் மூலம், இருநாட்டு பொருளாதார உறவுக்கு பெரும் உத்வேகம் கிடைத்துள்ளது. இதனால் பிரான்ஸின் ஏவியான நகரில் ஜி7 உச்சி மாநாட்டில் பங்கேற்ற நானும், பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மரும் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளோம் என்று தெரிவித்தார்.

8. ஜி7 நாடுகள், இந்தியா மற்றும் வளர்ந்துவரும் நாடுகளின் சக்தியை ஒருங்கிணைத்து, நாடுகளுக்கு இடையே வர்த்தகம் மற்றும் தொடர்புகளை ஊக்குவிக்க உலகளாவிய கட்டமைப்பை உருவாக்க பிரதமர் நரேந்திர மோடி யோசனை தெரிவித்துள்ளார்.

(i) அமெரிக்க அதிபராக ஜோ பைடன் பதவி வகித்தபோது இந்தியா, சவூதி அரேபியா,

இஸ்ரேல் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பா ஆகியவற்றின் இடையே வர்த்தக மற்றும் தொடர்புகளை ஏற்படுத்தும் திட்டம் (ஐஎம்இசி) அறிவிக்கப்பட்டது.

(ii) இருப்பினும், மேற்காசியாவில் ஈரான், அமெரிக்கா-இஸ்ரேல் இடையே கடந்த சில மாதங்களாக நடைபெறும் போரால் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாமல் உள்ளது. இந்நிலையில், பிரான்ஸின் ஏவியான் நகரில் ஜி7 மாநாட்டையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, பிரதமர் மோடி இந்தத் திட்டத்தைச் சுட்டிக்காட்டி உரை நிகழ்த்தினார். அப்போது அவர் கூறியதாவது:

- இந்தியா-மத்திய கிழக்கு நாடுகள்-ஐரோப்பா நாடுகள் ஆகியவற்றின் இடையே வர்த்தக மற்றும் தொடர்புகளை ஊக்குவிக்க திட்டம் (ஐஎம்இசி) உருவாக்கப்பட்டது. அதுபோன்று ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, பசிபிக் தீவுகளையும் இணைத்து திட்டங்களை நாம் உருவாக்க முடியும்.
- ஜி 7 அமைப்பு நாடுகளின் வளம், இந்தியாவின் திறமை, வளர்ந்து வரும் நாடுகளின் உரிமை ஆகியவற்றை இணைத்து இதை நாம் செய்யலாம்.
- அதேபோல், வர்த்தகம் மற்றும் தொடர்பு திட்டங்களை விரைவுபடுத்துவதற்கு சர்வதேச அணிதிரட்டல் கூட்டணி ஒன்றை ஏற்படுத்துவது குறித்தும் பரிசீலிக்கலாம்.

9. இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், நிகழாண்டு இறுதிக்குள் கையொப்பமிடப்படும் என்று பிரான்ஸில் பிரதமர் நரேந்திர மோடி உடனான சந்திப்புக்கு பிறகு ஐரோப்பிய யூனியன் தலைவர் உர்சுலா வான்டர் லெயன் அறிவித்தார்.

(i) பிரான்ஸின் ஏவியான் நகரில் கடந்த மூன்று நாள்களாக நடை பெற்ற ஜி7 கூட்டமைப்பின் வருடாந்திர உச்சிமாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். இந்த மாநாட்டையொட்டி, பல்வேறு நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் தலைவர்களுடன் அவர் இருதரப்பு பேச்சு வார்த்தையில் ஈடுபட்டார்.

(ii) உலகின் மொத்த உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கை உள்ளடக்கிய இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஐரோப்பிய யூனியனுக்கான இந்தியாவின் 99 சதவீத ஏற்று மதிகளுக்கு வரி நீக்கம் அல்லது குறைப்பு செய்யப்பட உள்ளது. இதேபோல், ஐரோப்பிய யூனியனில் இருந்து இந்தியாவுக்கு மேற்கொள்ளப்படும் 97 சதவீத ஏற்றுமதிகளுக்கு வரிச் சலுகை வழங்கப்பட உள்ளது.

10. தூத்துக்குடி மாவட்டம், அல்லிக்குளத்தில் விண்வெளி வாகனங்கள் பொது தொழில்நுட்ப வசதி மையம் அமைக்க தமிழ்நாடு அரசும், இந்திய தேசிய விண்வெளி ஊக்கு விப்பு மற்றும் அங்கீகார மையத்துக்கு இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

(i) கடந்த 11-ஆம் தேதி குஜராத் மாநிலம், அகமதாபாத்தில் நடை பெற்ற மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தை தொழில்துறை அமைச்சர் ச.கீர்த்தனா முதல்வர் ஜோசப் விஜய்யிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

(ii) இது, மாநிலத்தில், விண்வெளி உற்பத்திக்கான உலகத்தர சூழலை உருவாக்கும் முயற்சியில் முக்கிய மைல்கல்லாக அமையும். இந்த ஒப்பந்தத்தின்படி, இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் நிறுவனம் ரூ.100 கோடி மதிப்பிலான உபகரணங்களை வழங்கும்.

(iii) தமிழ்நாடு அரசு தேவைப்படும் நிலத்தை வழங்கி அதில் கட்டடங்கள், அடிப்படை வசதிகள் மற்றும் தேவையான உட்கட்டமைப்புகளை ஏற்படுத்தும்.

(iv) இந்தமையம், அதிர்வு, அதிர்ச்சி, வெப்ப-வெற்றிடம், மின் சார்ந்த குறுக்கீடு, ஒத்திசைவு, அழுத்தம் மற்றும் ஓட்டம், சோதனை, ஏவுகணை வாகன கூட்டமைப்பு, உதிரிப்பாகங்கள் ஒருங்கிணைப்பு மற்றும் ஹைட்ரோக்ளேவ் செயல் பாடுகள் ஆகியவற்றிற்கான அதிநவீன சோதனை மற்றும் தரநிலை உறுதிப்படுத்தும் வசதிகளை பயன்பாட்டிற்கு வழங்கும்.

(v) அதிக முதலீட்டுடன் அமைக்கப்படும் வசதிகள், தொழில் துறைக்கு விண்வெளி அமைப்புகள் மற்றும் உதிரிபாகங்கள் உருவாக்க, சோதிக்க, தரநிலை உறுதிப்படுத்த ஆகும் செலவையும் மற்றும் நேரத்தையும் குறைக்க உதவும்.

(vi) குலசேகரப்பட்டினத்தில் அமைக்கப்படவுள்ள ஏவுகணை தளம் அருகில் இந்த மையம் உருவாக்கப்படவுள்ளது. இந்த வசதி, தமிழ்நாட்டை இந்தியாவின் முன்னணி விண்வெளி உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு மையமாக நிலைநிறுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(vii) இது, உலக விண்வெளி உற்பத்தி மையமாக இந்தியாவை உருவாக்கும் கனவுக்கு முக்கிய பங்களிப்பாக விளங்கும் என்று தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11. இந்தியாவின் டிஜிட்டல் உள்கட்டமைப்போடு செயற்கை நுண்ணறிவை (AI) ஒருங்கிணைப்பது நாட்டின் நிதிச் சூழலை மாற்றியமைத்து வருகிறது.

(i) இந்தியாவின் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு (DPI)

- கடந்த பத்தாண்டுகளில், ஆதார் (Aadhaar), யுபிஐ (UPI), நேரடிப் பயன் பரிமாற்றம் (DBT), ஜிஎஸ்டிஎன் (GSTN) மற்றும் கணக்கு ஒருங்கிணைப்பாளர் (Account Aggregator) போன்ற அமைப்புகளை உள்ளடக்கிய, உலகத்தரம் வாய்ந்த டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பை (DPI) இந்தியா உருவாக்கியுள்ளது.
- கடன் பெறுவதை எளிதாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த கடன் இடைமுகம் (Unified Lending Interface - ULI) என்பது சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு முக்கியமான முன்னேற்றமாகும்.
- நேரடிப் பயன் பரிமாற்ற (DBT) அமைப்பு குடிமக்களுக்கு ₹51 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகையை வெற்றிகரமாக வழங்கியுள்ளது; கசிவுகளைத் தடுத்தல் மற்றும் பயனாளிகளைத் துல்லியமாகக் கண்டறிதல் ஆகியவற்றின் மூலம் ₹4.3 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகை சேமிக்கப்பட்டுள்ளது.

(ii) செயற்கை நுண்ணறிவின் மாற்றத்தை ஏற்படுத்தும் பங்கு

- "புத்திசாலித்தனமான" மற்றும் "சூழலை உணர்ந்து செயல்படும்" நிதி அமைப்புகளை உருவாக்க, ஏற்கனவே உள்ள DPI-உடன் AI ஒருங்கிணைக்கப்படும் ஒரு புதிய கட்டத்திற்கு இந்தியா அடியெடுத்து வைத்துள்ளது.
- தனியார் தளங்களைச் சார்ந்திருக்கும் பல வளர்ந்த நாடுகளைப் போலன்றி, இந்தியாவின் டிஜிட்டல் நிதி கட்டமைப்பு தனித்துவமானது; ஏனெனில் இது பரந்த அளவிலான புத்தாக்கத்தை ஊக்குவிக்கும் பொது அணுகல் கொண்ட உள்கட்டமைப்பின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

(iii) கட்டணம் செலுத்துதல் மற்றும் நிதி உள்ளடக்கத்தில் புரட்சி

- நிகழ்நேரக் கட்டணச் சேவையில் UPI ஒரு உலகளாவிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளது;

இதன் பயன்பாடு பெரிய வணிக வளாகங்கள் முதல் சிறிய தெருவோர வியாபாரிகள் வரை பரவியுள்ளது.

- 2025-ஆம் ஆண்டில், உலகளாவிய நிகழ்நேர டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் 49% பங்கை UPI கொண்டிருந்தது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி உள்ளடக்கக் குறியீடு (Financial Inclusion Index), மார்ச் 2021-ல் இருந்த 53.9-லிருந்து மார்ச் 2025-ல் 67.0-ஆகக் கணிசமாக உயர்ந்துள்ளது; இது நிதிச் சேவைகளின் அணுகல் மற்றும் தரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது.

(iv) மொழியின் மூலம் அணுகல்தன்மையை ஊக்குவித்தல்

- AI-ஆல் இயங்கும் குரல் வழி இடைமுகங்கள் மற்றும் பலமொழி அமைப்புகள், முதியவர்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் தொழில்நுட்ப அறிவு அதிகம் இல்லாதவர்களுக்கும் டிஜிட்டல் நிதிச் சேவைகளை அணுகக்கூடியதாக மாற்றுகின்றன.
- பிராந்திய மொழிகளில் சேவைகளை வழங்க AI-ஐப் பயன்படுத்துவதன் மூலம், டிஜிட்டல் இடைவெளி குறைக்கப்படுகிறது; இது அதிகமான மக்கள் தங்கள் நிதியைத் தாங்களே நிர்வகிக்க உதவுகிறது.

(v) கடன் துறையில் புரட்சி

- வரலாற்று ரீதியாக, முறையான கடன் வசதிகள் ஆவணப்படுத்தப்பட்ட கடன் வரலாறு மற்றும் பிணையம் (collateral) உள்ளவர்களுக்கு மட்டுமே கிடைத்தன.
- AI மற்றும் ULI ஆகியவை இப்போது கடன் வழங்குநர்களைப் பெருமளவிலான மாற்றுத் தரவுகளை (alternative data) பகுப்பாய்வு செய்ய அனுமதிக்கின்றன; இதன் மூலம் சிறு வணிகங்கள், விவசாயிகள் மற்றும் முதல் தலைமுறை தொழில்முனைவோர்கள் எளிதாகக் கடன்களைப் பெற முடிகிறது.
- செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் கடன் செயலாக்கத்தின் செயல்திறனையும் வேகத்தையும் மேம்படுத்துவதோடு, நிதி நிறுவனங்களுக்கு மிகவும் துல்லியமான இடர் மதிப்பீடுகளையும் செய்ய உதவுகின்றன.

(vi) பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் சவால்களை எதிர்கொள்ளுதல்

- பரிவர்த்தனை முறைகளை நிகழ்நேரத்தில் பகுப்பாய்வு செய்து, சந்தேகத்திற்கிடமான செயல்பாடுகளை நொடிகளுக்குள் கண்டறிவதன் மூலம், மோசடியைக் கண்டறிவதில் செயற்கை நுண்ணறிவு ஒரு முக்கியப் பங்காற்றுகிறது.
- இருப்பினும், இணையக் குற்றவாளிகள் ஃபிஷிங்கிற்காக டீப்ஃபேக் குரல்கள் மற்றும் படங்கள் உள்ளிட்ட அதிநவீன தாக்குதல்களுக்கும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகின்றனர்.
- இந்த அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள, இந்தியா மேம்பட்ட இணையப் பாதுகாப்பு, டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் மீள்திறன் கொண்ட உள்கட்டமைப்பு ஆகியவற்றில் தொடர்ந்து முதலீடு செய்ய வேண்டும்.

(vii) முடிவுரை: அதிகாரமளித்தல் மற்றும் பொறுப்பு

- நிதித்துறையில் செயற்கை நுண்ணறிவின் இறுதி வெற்றி, பொதுமக்களின் நம்பிக்கையையும், பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கிய அமைப்புகளை

உருவாக்குவதையும் சார்ந்துள்ளது.

- நிதியை டிஜிட்டல் மயமாக்குவதைத் தாண்டி, மனிதனை மையமாகக் கொண்ட ஆளுகை மற்றும் தொடர்ச்சியான புதுமைகளின் மூலம் ஒவ்வொரு இந்தியருக்கும் அதிகாரமளிக்கும் ஒரு அமைப்பை உருவாக்குவதே இதன் இலக்காகும்.